# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,919 — 1932 ம் ௵ சித்திரை௴ 22 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின்படி முல்லைத்தீவு அரசிறை வருமானப் பிரிவுக்குரிய வித்தியாபரிபாலன சபையால் செய்யப்பட்டு, வித்தியாசங்கத்தின் அங்கீகாரம் பெற்று, இலங்கை (அரசாங்கசபை) 1931 ம் ஆண்டின் மந்திராலோசனைச்சபைக் கட்டளையின் 93 ம் பிரமாணத்தின்படி உத்தம தேசாதிபதியவர்களால் அவர்மீது வைக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனுர் கட்டளைப்படி,
சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர,
வித்தியா மந்திரி.

வித்தியா மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஆண்டு ஏப்பிரல்௴ 15 ம் தேதி.

உபவிதி.

1927 ம் ஆண்டு நவம்பர்௴ 4 ம் தேதியின் 7,613 ம் இலக்க அரசினர் கெசற் பத்திரிகையில் 1927 ம் ஆண்டு ஒக்டோபர்௴ 29 ம் தேதியைக்கொண்டு 25 ம் பிரிவின்படி பிரசுரிக்கப்பெற்ற உபவிதிகள் பின்வருமாறு திருத்தப்பெறும்:—

(1) 1 ம் உபவிதியில் கொடுக்கப்பெற்ற "ஒழுங்குச் சட்டம்" என்பதன்வரை விலக்கணத்தில்வரும் "உதவிபெறும் பாடசாலைகள்" என்னும் பதங்களுக்குப்பின் "அல்லது அரசினர் பாடசாலைகள்" என்னும் பதங்களையும் சேர்த்துக் கொள்க.

(2) "பாடசாலை" என்பதற்கு தற்போதுள்ள வரைவிலக்கணத்தைத் தவிர்த்து அதற்குப் பதிலாகச் சேர்க்கும் "'பாடசாலை' என்னும் பதம் இங்குள்ள B அட்டவணையிற் குறித்துள்ள பாடசாலைகளையும், இனிமேல் வித்தியாதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும் முல்லைத்தீவு கிராம வித்தியாபரிபாலனசபை எல்லைக்குள் உள்ள எப்பாடசாலையையும் கருதும்" என்பவற்றை மேற் கூறிய 1 ம் உபவிதியில் வைத்துக்கொள்க.

(3) 4 ம் உபவிதியின் 2 ம் பந்தி 3 ம் வரியில் உள்ள "நாலாம்" என்னும்பதத்தைத் தவிர்த்து அதற்குப்பதிலாக "ஐந்தாம்" என்னும் பதத்தைவைத்துக்கொள்க.

(4) தற்போதுள்ள 9 ம் உபவிதியைத் தவிர்த்து அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை வைத்துக்கொள்க. "பிள்ளைகள் பாடசாலைக்குப் போகவேண்டிய நேரங்களில், காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் இடையில், முகாமைக்காரனுல் அல்லது தலைமை ஆசிரியனுல் குறிக்கப்பெறக் கூடிய எந்த ஐந்து மணித்தியாலங்களும் ஆகும். ஆயின் பாலர் வகுப்புப் பிள்ளைகள் மூன்று மணித்தியாலங்களுக்குப் மேல் பாடசாலைக்குப்போக வேண்டுமென்ற அவசியமில்லை. பாடசாலை நேரசூசி வித்தியாதரிசியால் அங்கீகரிக்கப்பட வேண்டும்."

B. அட்டவணை.

பாடசாலைகள்.

கரிக்கட்டுமூலை வடக்கு.

| | | |
|---|---|---|
| 1. | அர்ச். பத்திரிசியார், ஆங்கிலபாடசாலை | ரோ. க. மிஷன் |
| 2. | ஷை சுவபாஷா பாடசாலை | ஷை |
| 3. | சந்தானுகி பாடசாலை, சிலாவத்தை .. | ஷை |
| 4. | கரைச்சிக்குடியிருப்பு சைவப் பாடசாலை | இந்து |
| 5. | வெள்ளைமுள்ளிவாய்க்கால் பாடசாலை . | அரசினர் |
| 6. | சீ. எம். எஸ். பாடசாலை, தனியூற்று .. | சீ. எம். எஸ். மிஷன் |

முள்ளியவளைப் பாடசாலைப் பிரிவு.

| | | |
|---|---|---|
| 7. | சைவப் பாடசாலை, முள்ளியவளை .. | சைவ பரிபாலனசபை |
| 8. | ரோ. க. பாடசாலை, வற்றுப்பளை .. | ரோ. க. மிஷன். |

புதுக்குடியிருப்புப் பாடசாலைப் பிரிவு.

| | | |
|---|---|---|
| 9. | அர்ச். சூசையப்பா பாடசாலை, புதுக்குடியிருப்பு | ரோ. க. மிஷன் |
| 10. | புதுக்குடியிருப்புப் பாடசாலை .. | சீ. எம். எஸ். மிஷன் |
| 11 | புலமத்தலன் பாடசாலை .. | ரோ. க. மிஷன் |
| 12. | அம்பலவன்பொக்கணைப் பாடசாலை .. | அரசினர் |

கரிக்கட்டுமூலை தெற்குப் பாடசாலைப் பிரிவு.

| | | |
|---|---|---|
| 13. | குமுளமுனைப் பாடசாலை .. | அரசினர் |
| 14. | கொக்குத்தொடுவாய்ப் பாடசாலை .. | ஷை |
| 15. | கொக்கிலாய்ப் பாடசாலை .. | ஷை |
| 16. | ஆண்டான்குளம் பாடசாலை .. | ஷை |
| 17. | அலம்பில் பாடசாலை .. | ரோ. க. மிஷன் |
| 18. | செம்மலைப் பாடசாலை .. | இந்து |

மேற்பற்று வடக்கு பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 19. | ஓட்டுசுட்டான் பாடசாலை | .. | சீ. எம். எஸ். மிஷன் |
| 20. | கச்சிலைமடுப் பாடசாலை | .. | சைவபரிபாலன சபை |

மேற்பற்று கிழக்கு பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 21. | பட்டிக்குடியிருப்புப் பாடசாலை | .. | அரசினர் |
| 22. | நெடுங்கேணிப் பாடசாலை | .. | ஷை |
| 23. | மாமடுப் பாடசாலை | .. | இந்து |

மேற்பற்று தெற்குப் பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 24. | ஆயிலடிப் பாடசாலை | .. | இந்து |

கிழக்குமூலை தெற்குப் பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 25. | வவுனியா பிரதம ஆங்கில பாடசாலை | | அரசினர் |
| 26. | வவுனியா சுவபாஷா பாடசாலை | .. | சீ. எம். எஸ். மிஷன் |
| 27. | றம்பைக்குளம் சுவபாஷா பாடசாலை | . | றோ. க. பாடசாலை |
| 28. | புதுக்குளப் பாடசாலை | .. | அரசினர் |
| 29. | பெரியகோமரசங்குளப் பாடசாலை | .. | ஷை |
| 30 | இளமருதங்குளப் பாடசாலை | .. | றோ. க. மிஷன் |

கிழக்குமூலை வடக்குப் பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 31. | மரையடித்தகுளம் பாடசாலை | .. | அரசினர் |
| 32. | ஓமந்தைப் பாடசாலை | .. | ஷை |
| 33. | பாலைமோட்டைப் பாடசாலை | .. | ஷை |

நடுச்செட்டிக்குளம் பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 34. | நெலுக்குளம் பாடசாலை | .. | சீ. எம். எஸ். மிஷன் |
| 35. | சோனகசாளம்பைக்குளம் பாடசாலை | . | அரசினர் |
| 36. | தவசியாக்குளம் பாடசாலை | .. | ஷை |

சின்னச்செட்டிக்குளம் கிழக்குப் பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 37. | பெரியபுளியாங்குளம் பாடசாலை | .. | அரசினர் |
| 38. | முதலியாகுளம் பாடசாலை | .. | றோ. க. மிஷன் |
| 39. | பெரியகொச்சிக்குளம் | .. | ஷை |

கிழக்குமூலை தெற்கு (சிஙகள) பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 40. | மாமடுவா பாடசாலை | .. | அரசினர் |
| 41. | மகாகச்சக்கோடிய பாடசாலை | .. | ஷை |
| 42. | மடுக்கந்தைப் பாடசாலை | .. | ஷை |
| 43. | ஈரற்பெரியகுளம் பாடசாலை | .. | ஷை |
| 44. | அலகல்லப் பாடசாலை | .. | ஷை |

சின்னச்செட்டிகுளம் மேற்கு பாடசாலைப் பிரிவு.

| | | | |
|---|---|---|---|
| 45. | மரதமடுவ பாடசாலை | .. | அரசினர் |
| 46. | சூடுவெந்தபில பாடசாலை | .. | ஷை |
| 47. | ஆண்டியாபுளியங்குள பாடசாலை | .. | ஷை |
| 48. | பூமடுவ பாடசாலை | .. | ஷை |
| 49. | உழுக்குளம் பாடசாலை | .. | ஷை |

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

**1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிருவல் எடுத்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—**

பி. எஸ். பிரதமபடத்து இல. 72. எக்சிரிமுக்ற் 1. குறிச்சி—மில்லவாணு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 348B | பொறணுவெவத்தை அல்லது எகலகஸ்கெணு | சேனை | .. | குணசிங்க முதியான்செலாகே டிங்கிரிவண்டா | 0 1 21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ (மே) வைகாசி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப் பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்து களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1932 ம் ௵ (ஏப்றில்) சித்திரை ௴ 12 ௳.

சி. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடுப்பிட்டி சந்தையை பெருப்பிக்கிறதாகிய பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 7,942. குறிச்சி—தனக்காரகுறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | | விபரம். | | உரித்தாளியின் பெயர். | | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெற்றவேம்படி | .. | பாழ்நிலம் | .. | வேலு தம்பு, வேலு நாகலிங்கம், வல்லிபுரம் சின்னதுரை | | 0 0 5·91 |
| 2 | ஷை | .. | ஷை | .. | கதிரிப்பிள்ளை அன்னமலை சாரி .. | .. | 0 0 13·37 |
| 3 | ஷை | .. | ஷை | .. | சபாபதியின் கைம்பெண் தெய்வானபிள்ளை | .. | 0 0 4·40 |
| 6 | குமன்குடியிருப்பு | .. | ஷை | .. | காசிநாதர் சபாபதியின் பெண் பொன்னு | .. | 0 0 5·10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵ த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ௵ வைகாசி மாசம் 18 ந் தேதியிலன்று 10 மணிக்கு யாட்பாணக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்து களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் மேற்படி காணியின் உறுதிகளைக் கொண்டுவந்து காட்டும் படிக்கும் இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாட்பாணக் கச்சேரி,
1932 ம் ௵ சித்திரை ௴ 7 ௳.

ஈ. றீ. டைட்சன்,
அரசாட்சி ஏசண்டு, வடமாகாணம்.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 102 (களுத்துறை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஹூ (ஏப்பிறில்) சித்திரைமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஹூ (ஏப்பிறில்) சித்திரைமீ 11 ந் தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப்பகுதிக் கந்தோரிற் கொடுக்கப்பட்டது.

சீ. எவ். இங்கிள்டோ,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித்துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட்குட் படவிருக்குங் காணித்துண்டு எதுவாயினும் மேற்படியறிவித்தலின் கீழ் விசாரணைபண்ணப்பட மாட்டாததுமன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.

அட்டவணை.

மேன் மாகாணம், களுத்துறை டிஸ்திறிக், பஸ்துங் கோறளை கிழக்கு, கங்கபொடபற்றைச்சார்ந்த மாஹாகம வடக்கு கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் காணித்துண்டுகள்: இக்காணித்துண்டுகளெல்லாங் கீழ்க்காணு மெல்லைகட்குள்ளிருக்கின்றன.

வடக்கு: தியகடுவ கிராமத்தின் எல்லை, தியகடுவ கிராமத்தின் எல்லை (மாஹா எலவின் பகுதி), பாஹலவெல்கம கிராமத்தின் எல்லை;

கிழக்கு: பகலவெல்கம, இஹளவெல்கம என்னுங் கிராமங்களின் எல்லைகள்;

தெற்கு: இஹளவெல்கம, மாஹாகம தெற்கு கிராமங்களின் எல்லைகள்;

மேற்கு: கூடவிகம, நகல்ல என்னுங் கிராமங்களின் எல்லைகள் (கல்வக் எலவின் பகுதி).

இலங்கை யளவைப் பிரதமபடம் நி. 135.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 16 | அனுகொட்டுகந்த .. | .. | 0 | 3 | 21·7 |
| 27 | றத்தனடெனிய .. | .. | 0 | 1 | 10 |
| 47 | தனயங்கொடெல்ல | .. | 3 | 3 | 18 |
| 75 | தென்னபிற்றவத்த .. | .. | 9 | 3 | 3 |
| 436 | கெற்றகாவத்த .. | .. | 0 | 0 | 7·6 |
| 460 | அனுபொட்டுசந்தேபாஉனுகட்டிய .. | .. | 0 | 0 | 34·2 |
| 464 | அனுபொட்டுகந்த .. | .. | 0 | 0 | 18·55 |
| | மொத்தம் | .. | 15 | 0 | 33·05 |

[களுத்துறை நி. உ. 1—1932.]

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
இலக்கம் 103 (காலி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எவற்றிற்கேனும் அல்லது அவைகளின் எப்பங்குக்கேனும் அல்லது வேறெவ்வித சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு (ஏப்பிரல்) சித்திரைமீ 22 ந் திகதி தொடக்கம் மூன்றுமாச காலத்திற்குள் இதனடியில் கையொப்பமிட்டிருப்பவர்க்கு ஒருவருமறிவியாதிருக்குமிடத்து மேற்கூறிய நிர்ணய சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1932 ம் ஆண்டு (மார்ச்சு) பங்குனிமீ 14 ந் திகதி காலிக் கச்சேரியில கையொப்பமிடப்பட்டது.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசன்றர், காலி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் தென் மாகாண ஏசன்றரிடத்திலும் அவைகளின் படங்கள் அளவைக்கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுகொள்ளலாம்.

(b) இக்காணிகளில் அல்லது அவைகளில் எவற்றிற்கேனும் வழியுரித்து இருந்தாலும் அது அவ்வக் காணிகளுள்ள ஓர் சோந்தை உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

தென் மாகாணம், காலி டிஸ்திறிக், காலி நகரபரிபாலன சங்கத்தின் எல்லைக்குள் களுவெல்லை என்ற இடத்தில் கிடக்கும் பின்வரும் காணித்துண்டுகள்.

பிரதமபடம் இலக்கம் 14,048.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1A | பொறக்கொடெல்லவத்த அல்லது பொறக்கொடெல்ல (இறை இலக்கம் C 328 இன் ஓர் பகுதி) | .. | 0 | 0 | 25·53 |
| 2 | பொறக்கொடெல்ல (இறை இலக்கம் 326) .. | .. | 0 | 0 | 0·87 |
| 9 | கெக்கிறிபொக்கவத்த | .. | 0 | 0 | 5·30 |
| | | | 0 | 0 | 31·70 |

துண்டு 1 A இன் எல்லைகள் :—

வடக்கு: 14,048 ம் இலக்கத்தைக்கொண்ட பிரதமபடத்தில் காட்டிய துண்டு 1;

கிழக்கு; பிரசித்த வீதி (ரோட்டு);

தெற்கு: ஸ்ரீமான் கத்தோலிக்க கோயிற் காணி, தோப்பு, இறை இலக்கங்கள் 140 உம் 143A உம் (காலி) ஸ்ரீமான் கத்தோலிக்க மிஷனால் உரிமைபாராட்டப்படுவது;

மேற்கு: 14,048 ம் இலக்கத்தைக்கொண்ட பிரதமபடத்தில் காட்டிய துண்டு 1.

துண்டு 2 இன் எல்லைகள் :—

வடக்கும் மேற்கும்: பொறக்கொடெல்ல தென்னந்தோப்பு, இறை இலக்கம் 326, எச். அரியவன்சா Rev. H. Ariyawansa என்னும் பாதிரியாரால் உரிமை பாராட்டப்படுவது;

கிழக்கு: பிரசித்த வீதி (ரோட்டு);

தெற்கு: 14,048 ம் இலக்கத்தைக்கொண்ட பிரதமபடத்தில் காட்டிய துண்டு 1.

துண்டு 9 இன் எல்லைகள் :—

வடக்கு: கெக்கிறிபொக்கவத்த, இறை இலக்கம் 260. கே. ஆர். சாள்ஸ் (K. R. Charles) ஆலும் மற்றவர்களாலும் உரிமைபாராட்டப்படுவது;

கிழக்கு: 14,048 ம் இலக்கத்தைக்கொண்ட பிரதமபடத்தில் காட்டிய துண்டு 6;

மேற்கு: பிரசித்த வீதி (ரோட்டு);

தெற்கு: 14,048 ம் இலக்கத்தைக்கொண்ட பிரதமபடத்தில் காட்டிய துண்டு 6.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.